KALANJIYAM – International Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 2456-5148
Vol. 6, No. 03 (2026) 6

களஞ்சியம்
Peer-reviewed · Open access · Google Scholar
Crossref DOI · SJIF Imapact Factor 3.5 · Quarterly
Online@: ngmtamil.in
DOI: 10.63300/kijts603112026.51

UGC Approved by Transparent Peer Review

ARTICLES

உலகாயதம் என்னும் தமிழர்நெறி

The Tamil Way of Materialism

முனைவர் சிவகுமார் லிங்கம்[1,*iD]

[1] உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை, பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி - 620 017, தமிழ்நாடு, இந்தியா.

***Corresponding author:** முனைவர் சிவகுமார் லிங்கம், lingamparvathithayan@gmail.com

ORCID iD: முனைவர் சிவகுமார் லிங்கம் https://orcid.org/0000-0001-8382-2189

ARTICLE INFO

Article history
Received: 25 October 2026
Revised: 26 October 2026
Accepted: 5 November 2026

Article ID
KIJTS-2026-0032

Peer review
Double-blind peer review

Keywords
உலகாயதம்
உலகாய்தம்
லோகாயதம்
ஆன்வீட்சிகீ
விதந்தாவாத சத்தம்
பூதநெறி
பூதவாதம்
காட்சி அளவை
புத்தகோசர்
குணரத்னா
அரிபத்திரசூரி

ABSTRACT

This tradition is examined based on the naturalistic outlook and rationalist thoughts that prevailed in Sangam literature and ancient Tamil lifestyle. This article challenges through etymological and linguistic studies the Sanskrit and Pali literary traditions that portray Ulagayatham as an imported philosophy from outside. It discusses in detail how "Ulagayatham" evolved from the pure Tamil root word "Ulagam" (world), along with the antiquity of Tamil philosophy which prioritizes the five fundamental elements (earth, water, fire, air, and space). Through this, the article establishes the unique contribution of the Tamil tradition to the history of Indian materialist thought.

How to cite this article: லிங்கம், மு. சி. (2026). உலகாயதம் என்னும் தமிழர்நெறி. *KALANJIYAM – International Journal of Tamil Studies*, *6*(03), 602–612. https://doi.org/10.63300/kijts603112026.51
Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

ஆய்வுச் சுருக்கம்

பழந்தமிழ்ச் சமூகத்தில் புகழ்பெற்றிருந்த நெறி உலகாயதம். இந்நெறி தமிழகத்தில் தோன்றியது. ஆனால் உலகாயதம் என்னும் சொல் சமற்கிருத, பாலி மொழிச்

சொல்லாக விளக்கப்படுகின்றது. இதனை மறுத்து உலகாயதம் தமிழ்ச் சொல் என்றும் தமிழர் நெறி என்றும் இக்கட்டுரை விளக்குகின்றது.

**** **** ***

உலகாயதம் என்னும் தமிழ்ச் சொல் பற்றிச் சங்கத (சமசுகிருதம்), பாகத (பிராகிருத – பாலி) மொழிகள் சார்ந்து பல்வேறு விளக்கங்கள் கொடுக்கப்படுகின்றன. அவற்றுள் பெரும்பாலான விளக்கங்கள் உலகாயத்தை இழிவுபடுத்தும் நோக்கிலேயே வழங்கப்பட்டுள்ளன. அவற்றை நீக்கி உலகாயதத்தின் மெய்யான விளக்கத்தை வரலாற்றுச் சான்றுகளின் அடிப்படையில் அறிவதன் மூலம் தமிழருக்கும் உலகாயதத்திற்கும் இடையே இருக்கும் தொடர்புகள் வெளிப்படுகின்றன.

உலகாயதம் என்னும் தமிழ்ச் சொல்

உலகாயதம் என்ற சொல் உலகு + ஆயதம் ஆகிய இரு சொற்களின் கூட்டாக விளங்குகின்றது. அதைப்போல ஆயதம் என்ற சொல்லும் ஆயது + அம் ஆகிய இரு சொற்களின் கூட்டாக அமைகின்றது. ஆய என்பது ஆகிய (தோன்றிய) என்ற பொருளில் பழந்தமிழ் இலக்கியங்களில் (அகம். 151:11, ஐங். 362:1, கலித். 11:2; 75:15 முதலியன) பயின்று வருகின்றது. அதன்வழி ஆயது என்பது ஆகியது (தோன்றியது) என்ற பொருளைத் தருகின்றது. எனவே (உலகு + ஆயது + அம் - உலக் + ஆயத் + அம் =) உலகாயதம் என்பது உலகால் ஆகியதை விளக்குகின்றது.

உலகாயதம் காட்சி அளவையை வலியுறுத்துகின்றது (மணி. 27:274). இவ் அளவையை ஐம்பொறிகளுக்குப் புலனாகும் உலகை அடிப்படையாகக் கொண்டு விளக்குகின்றது. எனவே **உலகாயதம் உலகால் ஆகிய அறிவை விளக்கும் நெறியாகின்றது.**உலகாயதம் கண்ணுக்குப் புலனாகாது, கருத்துப் பொருளாக இருக்கும் இறைவன், இறப்புக்குப் பிறகான வாழ்வு (மணி. 27:103), மறுபிறப்பு (மணி. 27:276) முதலானவற்றை மறுக்கின்றது. அதன்வழி, இவ்வுலக வாழ்வை வலியுறுத்துகின்றது. எனவே **உலகாயதம் உலகால் ஆகிய வாழ்வை விளக்கும் நெறியாகவும் விளங்குகின்றது.**

உலகால் ஆகிய அறிவும், உலகால் ஆகிய வாழ்வும் உலகாயதத்தின் மையம். எனவே உலகாயதர் உலகம் தழுவிய அறிவுடையவராக (ஒட்பம் உடையவராக) விளங்குகின்றனர். இதனைத் தத்துவப் பிரகாசரின் (பொ.ஆ. பதினான்காம் நூற்றாண்டு) தத்துவப் பிரகாசம்,

உலகந் தழீஇய ஒட்பம் உடையவரே அவர் உலகாயதம் என்னும் உலகே

(தத்துவப்பிரகாசம் 155:4)

என்று விளக்குகின்றது.

1. உலகால் ஆகிய அறிவு

உலகாயதம் பற்றிய தமிழ்ச் சான்றுகள் காட்சி அளவையோடும் வைதீகச் சான்றுகள் ஆன்வீட்சிகீ என்ற அளவை அறிவியலோடும் பாலிச் சான்றுகள் விதந்தாவாத சத்தம் என்ற சொற்போர் கலையோடும் தொடர்புடையதாக இருக்கின்றது.

சங்கத நூல்களில் ஆன்வீட்சிகீயும் உலகாயதமும்

உலகாயதம் பற்றிய முதல் சங்கதக் குறிப்பு பாணினியத்தில் வருகின்றது (ராமகிருட்ண பட்டாச்சார்யா (இனி, ரா.ப.) 2011:187). 'மனுசம்கிதை, கௌதம தர்ம சூத்திரம், இராமாயணம், மகாபாரதம் முதலான வைதீக சங்கத நூல்களில் ஆன்வீட்சிகீ பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன' (சதீசு சந்திர வித்யாபூசனா (இனி, ச.ச.வி.) 1921:7). எனினும் ஆன்வீட்சிகீ பற்றிய விளக்கம் இந்நூல்களில் இல்லை. ஆன்வீட்சிகீ என்பது உலகாயதம், சாங்கியம், வைசேடிகம்[1] ஆகிய மூன்று நெறிகளையும் உள்ளடக்கியது (ரா.ப. 2011:132-133) என்றும் அவற்றுள் 'உலகாயதம் அளவையியலை அடிப்படையாகக் கொண்ட காட்சியம்[2] (Philosophy)' என்றும் அர்த்த சாத்திரம் (ரா.ப. 2011:190) விளக்குகின்றது. ஆன்வீட்சிகீ என்பதற்கு அளவை அறிவியல் (Logical science) என்ற பொருளை எசு.என். தாசுகுப்தா (இனி, தா.கு. 1952:512) தருகின்றார். அதன்வழி முற்கால சங்கத வைதீக நூல்கள் அளவையியலோடு உலகாயதத்தை இணைக்கின்றன. ஆனால் உலகாயதம் என்ற சங்கதச் சொல்லுக்கு அளவையியல் சார்ந்த விளக்கங்கள் தருவதில்லை.

லோகாயதா என்னும் சங்கதச் சொல்

உலகாயதம் என்ற தமிழ்ச் சொல் லோகாயதா என்னும் சங்கதச் சொல்லாகத் திரிகின்றது. இச்சொல் லோகா, ஆயதா ஆகிய இரு பகுதிகளைக் கொண்டதாக விளக்கப்படுகின்றது. அவற்றுள் லோகா என்பது மக்களைக் குறிக்கும் என்று மாதவர் (தே.ச. 2014:4), குணரத்னா (தே.ச. 2014:4, 62) முதலானவரும் உலகத்தைக் குறிக்கும் என்று அரிபத்திரசூரி (ரா.ப. 2011:179-180), துச்சி (தேவிபிரசாத் சட்டோபாத்யாயா & மிருணாள் காந்தி கங்கோபாத்யாயா (இனி, தே.ச. & மி.க.) 2006:390) முதலானவரும் விளக்குகின்றனர். ஆயதா என்ற சொல்லுக்குப் பெரும்பாலும் பரவியிருந்தது என்ற பொருள் அறிஞரால் தரப்படுகின்றது. எனவே லோகாயதா என்ற சங்கதச் சொல்லுக்கு மக்களிடையே பரவியிருந்தது என்ற விளக்கம் தருகின்றது. மாதவர், குணரத்னா முதலான அறிஞர் மக்கள் என்பதற்கு இழிவான, கீழான மக்கள் என்ற பொருளைத் தருகின்றனர். அதன்வழி, உலகாயதத்தை இழிவுபடுத்தும் விளக்கங்களைத் தருகின்றனர்.

லோகாயதா என்ற சொல்லை மனுசம்கிதை, அர்த்த சாத்திரம் முதலான முற்கால வைதீக நூல்கள் அளவையியலோடு இணைப்பதாலும் லோகாயதா என்ற சொல்லுக்கு அறிஞர் தரும் விளக்கம் இழிவான பொருளைத் தருவதாலும் உலகாயதம் சங்கதம் பேசிய மக்களுக்கு வெளியில் தோன்றியது என்று சங்கதச் சான்றுகள் காட்டுவதாலும் (தே.ச. 2014:48-71; ரா.ப. 2020:198) உலகாயதம் சங்கதச் சொல் இல்லை என்பது தெளிவாகின்றது.

சத் தரிசன சமுச்சயா என்ற சைன நூலில் அரிபத்திர சூரி (பொ.ஆ. எட்டாம் நூற்றாண்டு – ரா.ப. 2020:218) சைனத்தை அடிப்படையாகக் கொண்டு உலகாயதத்தை விளக்குகின்றார். அவர் உலகத்தை அடிப்படையாகக் கொண்டது உலகாயதம் என்று குறிப்பிடுகின்றார். இங்கு, உலகம் என்பது மனித உலகத்தைக் குறிக்கின்றது என்றும் சைன சமயத்தில் விளக்கப்படும் நரக உலகத்தையும் வான் உலகத்தையும் மறுக்கிறது என்றும் சுட்டுகின்றார் (ரா.ப. 2011:179-180). அரிபத்திர சூரி உலகாயதம் என்ற சங்கத சொல் பற்றிக் கவலைப்படாமல் இவ்விளக்கத்தைத் தருகிறார் என்பது வலியுறுத்தத்தக்கது (எம். சிவக்குமார சுவாமி 1977:99-101).

உலகத்தை அடிப்படையாகக் கொண்டது உலகாயதம் என்று அரிபத்திர சூரி சைனத்தை அடிப்படையாகக் கொண்டு விளக்குவதாலும் அவர் சங்கதச் சொல் அடிப்படையில் விளக்காததாலும் உலகாயதம் தமிழ்ச் சொல் என்பது தெளிவாகின்றது.

பாகதப் பாலி நூல்களில் விதந்தாவாத சத்தமும் உலகாயதமும்

புத்தரின் சிந்தனைகள் முப்பிடகம் (திரிபிடகம்) என்ற பெயரில் பாலி என்ற பாகத (பிராகிருத) மொழியில் தொகுக்கப்பட்டன. அவற்றுள் தீக நிகாயம் என்ற பிடக நூலுக்குப் புத்தகோசர் (பொ.ஆ. ஐந்தாம் நூற்றாண்டு) வழங்கிய உரையான சுமங்கல விலாசினியில் ‘உலகாயதத்தை விதந்தாவாத சத்தம்’ (தா.கு. 1952:512) என்று குறிப்பிடுகின்றார்.

உலகாயதரின் விதந்தாவாத சத்தம் பொ.ஆ. பன்னிரண்டாம் நூற்றாண்டில் சத்தநிதி என்பவரால் இயற்றப்பட்ட அக்கவம்சா என்ற பாலி இலக்கண நூலிலும் மொக்கலனாவால் இயற்றப்பட்ட அபிதானப் பதிப்பிகாவிலும் வருகின்றது. இந்நூல்களில் சொற்போர்கலை என்ற பொருளில் விதந்தாவாத சத்தம் கையாளப்படுகின்றது (ரா.ப. 2011:190). எனவே சொற்போர் கலையோடு தொடர்புடையதாக உலகாயதம் இருக்கின்றது.

லோகாயதா என்னும் பாலிச் சொல்

பாலி பிடக நூல்களில் உலகாயதம் என்ற தமிழ்ச் சொல் லோகாயதா, லோகாயதிகா, லோக்காயிகா முதலான வடிவங்களில் பதினான்கு இடங்களில் பயின்று வருகின்றன இதனை எடுத்துக்காட்டும் ராமகிருட்ண பட்டாச்சார்யா (2020:49) லோகாயதா என்ற சொல்லின் பொருளை விரிவாக ஆராய்கின்றார். இப்பாலி பிடகங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த அறிஞர் உலகாயதம் என்ற சொல்லுக்கு, “மீவியற்பியல், அண்டவியல், உலகம் பற்றிய அறிவு” ஆகிய பொருளைத் தருவதை (2020:52) எடுத்துக்காட்டுவதோடு உலகாயதம் என்ற சொல் அளவையோடு இணைந்ததாக இருப்பதை வில்லியம் டெட் (William Stede), ருடால்ப் ஓட்டோ பிராங்க் முதலான அறிஞர் விளக்குவதையும் சுட்டிக்காட்டுகின்றார் (ரா.ப. 2020:51). அதன்வழி, உலகாயதம் என்ற சொல் வாதத்தோடும் மறுத்துப் பேசுவதோடும் தொடர்புடையது

என்று முடிவுரைக்கின்றார் (ரா.ப. 2020:63). அதற்கான விளக்கத்தை அவரால் லோகாயதம் என்ற பாலி, சங்கத சொல்லுக்கு வழங்க முடியவில்லை.

லோகாயதா (உலகாயதம்) என்ற பாலிச் சொல் லோக, ஆயதா ஆகிய இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கிறது. அவ்விரு பகுதிகளுக்கும் சங்கத அடிப்படையில் அக்கவம்சா என்ற நூலில் சத்த நிதி பொருள் கொள்கின்றார். அவர் லோகா என்பதற்கு மக்கள் என்ற பொருளைத் தருவதோடு ஆயதா என்பதை அ +யத் +த்தா என்பதிலிருந்து வருவிக்கிறார். யத் என்பதற்கு முயற்சி செய்தல் என்று பொருள். யத் என்பதற்கு முன் உள்ள அ என்பது எதிர்மறைப் பொருளை இத்தொடருக்குத் தருகின்றது. அதன்வழி, முயற்சி செய்வதை நிறுத்திய மக்கள் உலகாயதர் என்று விளக்குகின்றார் (தா.கு. 1952:514). இவ்விளக்கம் உலகாயதத்தை இழிவுபடுத்துவதால் ஏற்கத்தக்கதன்று.

தமிழகத்தைச் சேர்ந்த காஞ்சிபுரப் பௌத்தப் பள்ளியில் இருந்து இலங்கை சென்ற (சி.எசு. சுந்தரம் 1999:155) புத்த கோசர் உலகாயதத்தைத் தமிழை அடிப்படையாகக் கொண்டு விளக்குகின்றார். லோகா என்பதற்கு உலகம் என்று பொருள்கொள்ளும் அவர் ஆயதா என்பதை ஆயதனா (அடிப்படை) என்பதோடு இணைத்து முப்பிடக நூல்களுள் ஒன்றான சம்யுக்தநிகாயத்தின் உரை நூலான சரத்தா பகசினியில் விளக்குகின்றார் (தா.கு. 1952:515). அதன்வழி, "மூடத்தனம் மற்றும் சுத்தமற்ற உலகத்தின் அடிப்படை" என்று உலகாயதத்தை இழிவுபடுத்தும் பொருளைத் தருகின்றார்.

'பொருள்சார் உலகத்தை அடிப்படையாகக் கொண்ட நெறி உலகாயதம்' (2014:5) என்று புத்தகோசர் விளக்கத்தைத் தேவிபிரசாத் சட்டோபாத்யாயா ஒழுங்குபடுத்துகின்றார். எசு. இராதாகிருட்ணன், "புலன் உலகோடு தொடர்புடையது உலகாயதம்" என்று (1923:279) சுட்டுகின்றார். எனினும் அவர் அதற்கான சான்றுகளைக் காட்டவில்லை. அதுவும் புத்த கோசரைப் பின்பற்றியதே. எனவே உலகாயதத்திற்குச் சரியான விளக்கம் தருபவர்கள் தமிழகத்திலிருந்து இலங்கை சென்ற புத்த கோசரைப் பின்பற்றுகின்றனர். அதனால் உலகாயதம் தமிழ்ச் சொல் என்பதும் அது தமிழகத்தில் இருந்து சென்ற நெறி என்பதும் தெளிவாகின்றது.

காட்சி அளவையும் தமிழ் உலகாயதமும்

உலகாயதம் காட்சி அளவையோடு தொடர்புடையதாக இருப்பதை மணிமேகலை வெளிப்படுத்துகின்றது. அறுவகைச் சமயத்தை அறிமுகப்படுத்தும் இந்நூல் காட்சி அளவையை மட்டும் ஏற்கும் நெறியாக உலகாயதத்தை அறிமுகப்படுத்துகின்றது (27:78-85). இந்நூல் பூதநெறியின் மற்றொரு உரையாக (வேறு உரை) உலகாயதத்தை விளக்குகின்றது. இதனை,

மெய்வகை இதுவே வேறு உரை விகற்பமும்

உண்மைப் பொருளும்உல காயதன்[3]உணர்வே(மணி. 27:272-273)

என்று குறிப்பிடுகின்றது. இப்பகுதியில் வரும் விகற்பம் என்ற சொல்லுக்கு, "யான் கூறும் வேறுள்ள சொல் விகற்பங்களும்" என்று உ.வே. சாமிநாதையர் (2013:323)

விளக்கம் தருகின்றார். அவர் விகற்பம் என்ற சொல்லை முன்னுள்ள உரை என்பதோடு இணைத்துத் தவறாகப் பொருள் காண்கின்றார். ஆனால் வேறு உரை (மற்றொரு உரையாகிய) என்பதையும் விகற்பம் என்பதையும் பிரித்துப் பொருள் காண வேண்டும். அவர் தவறாகப் பொருள் காண்பதன் மூலம் உலகாயதமும் பூதநெறியும் வேறுவேறானது என்ற பொருளைத் தருகின்றார்.

உ.வே. சாமிநாதையரைப் பின்பற்றி ஔவை சு. துரைசாமிப்பிள்ளையும், "இவற்றின் வேறாகக் கூறப்படும் பொருளும்" என்று (ந.மு. வேங்கடசாமி நாட்டார் & ஔவை சு. துரைசாமிப்பிள்ளை 2015:427) அதே பொருளைத் தருகின்றார்.

விகற்பம் என்ற சங்கதச் சொல்லுக்கு வேறுபாடு என்று பொருள் (தமிழ் லெக்சிகன் ப. 3634, ஆர்தர் அந்தோணி மேக்டோனியல் 1929:273). பூதநெறியின் மற்றொரு உரையாகிய வேறுபாடும் (விகற்பமும்) உண்மைப் பொருளும் உலகாயதன் உணர்வை வெளிப்படுத்துகின்றது என்பதே சரியான பொருள். இது வேறுபாடுடைய அகக் காட்சியையும் உண்மைப் பொருளைக் காட்டும் புறக் காட்சியையும் உலகாயதர் உணர்வதைக் காட்டுகின்றது.

உரை விகற்பம் (மணி. 27:272) என்ற தொடருக்கு உ.வே. சாமிநாதையர், "உலோகாயதன் கொள்கைகளுள் பூதம் நான்கேயென்ப தொழிந்தவைகள் தன் கொள்கையோ டொக்குமாதலின்" (2013:323) என்று உரை வகுக்கின்றார். இவ்வுரை உலகாயதம் பூதநெறியிலிருந்து மாறுபட்டது என்ற கருத்தையும் உலகாயதம் நான்கு பூதங்களை அடிப்படையாகக் கொண்டது என்ற கருத்தையும் வெளிப்படுத்துகின்றது. ஆனால் சான்றுகள் இதற்கு மாறாக இருக்கின்றன.

சூத்திரகிரதங்க சூத்திர விருத்தி என்ற சைன ஆகமத்தின் உரையாசிரரான சீலங்கர் உலகாயதம் ஐந்து பூதங்களை ஏற்றுக் கொள்வதையும் (1.1.7-8) (ரா.ப. 2011:34). சாருவாகம் நான்கு பூதங்களை ஏற்றுக் கொள்வதையும் (1.1.16) சுட்டுகின்றார் (ரா.ப. 2011:35). இதை விளக்கும் ராமகிருட்ண பட்டாச்சார்யா உலகாயதம் தொடக்கத்தில் ஐந்து பூதங்களை ஏற்றுக் கொண்டது என்று குறிப்பிடுகின்றார் (ரா.ப. 2011:34).

உலகாயதம் பிற்காலத்தில் ஐம்பூதக் கொள்கையைக் கைவிட்டு சாருவாகரின் நான்கு பூதக் கொள்கையை ஏற்றுக் கொண்டது. இப்பிற்பட்ட நிலையைச் சங்கரர், மாதவர் முதலான சங்கத நூலறிஞரும் பரிமேலழகர், சிவஞான சித்தியார் முதலான தமிழ் நூலறிஞரும் வெளிப்படுத்தினர்.

பண்டைத் தமிழரின் காட்சி பற்றிய சிந்தனைகளும் அகம் (அகக்காட்சி), புறம் (புறக்காட்சி) என்று இரண்டு பகுதிகளாக இருப்பதை நிர்மல் செல்வமணி (1996:28-29) எடுத்துக்காட்டுகின்றார். இது உலகாயதம் என்னும் பெயரோடு பொருந்துவதைப் புத்த கோசர் விளக்குகின்றார்.

புத்த கோசரும் உலகாயத ஆயதனாவும்

புத்த கோசர் உலகாயதத்தில் வரும் ஆயதா என்ற சொல்லை ஆயதானாவோடு இணைக்கின்றார். ஆயதனா என்ற சொல் பௌத்தத்தில் சிறப்பாக

விளக்கப்படுகின்றது. ஆயதனாவை வாயில் என்று மணிமேகலை (30:86-87) குறிப்பிடுகின்றது. சிவஞான சித்தியார் பரபக்கத்திற்கு உரையெழுதிய திருவொற்றியூர் தத்துவப் பிரகாசர் உலகாயதக் காட்சி அளவையின் ஒரு பகுதியாக வாயில் காட்சியை விளக்குகின்றார் (1955:23).

ஆயதனா என்ற சொல்லுக்குத் தங்கும் இடம், இல்லம் ஆகிய பொருளே யசூர் வேதத்திலும் உபநிடதங்களிலும் இருக்கின்றது (கேப்பிரியல் எல்லிசு 2021:1). இவ்வட சொல்லுக்குப் புத்த கோசர் அளவை அடிப்படையில் தரும் விளக்கம் சங்கத, பாகத நூல்களில் இல்லை என்றும் புத்த கோசரின் பங்களிப்பு என்றும் பாலி ஆங்கில அகராதி (ப. 105) குறிப்பிடுகின்றது. சங்கத (சமசுகிருத) பாகதத்தில் (பிராகிருத, பாலியில்) இல்லாத இச்சிந்தனைகளைப் புத்த கோசர் தமிழில் இருந்து எடுத்து விளக்கியுள்ளார்.

ஆயதனா என்ற பாலிச் சொல்லுக்குப் புலனுணர்வு, காட்சிப் பரப்பு, கருத்துப்பொருள், புலனுறுப்பு, பொருள் ஆகிய பொருள்களைப் பாலி ஆங்கில அகராதி (ப. 105) தருகின்றது. ஆனால் புத்தகோசர் ஆயதனா என்பது புலனுறுப்பையும் புலனுணர்வையும் ஒருங்கிணைப்பது என்று பொருள் கொள்கிறார். அவர் ஆயதனா அகம், புறம் என்று இரு பகுதிகளைக் கொண்டது என்றும் அவற்றுள் அகம் என்பது கண், காது, மூக்கு, நாக்கு, உடல், மனம் ஆகிய ஆறு பகுதிகளையும் புறம் என்பது பார்க்கும் பொருள், ஒலி, மணம், சுவை, தொடும் பொருள், அறம் ஆகிய ஆறு பகுதிகளையும் உடையது என்றும் விளக்குகின்றார் (பாலி ஆங்கில அகராதி ப. 105). இவ்விளக்கத்தை உலகாயத (உலகு ஆயத) அறிவு மரபோடு இணைக்கும்பொழுது பொருள் இன்னும் தெளிவுபெறுகின்றது.

புத்த கோசரின் சிந்தனை உலகாயத அறிவுமரபின்படி, அகக்காட்சி, புறக்காட்சி என்று காட்சி இரண்டு பகுதிகளை உடையதாக இருக்கின்றது. அகக்காட்சி ஐம்பொறிகளையும் மனதையும் புறக்காட்சி உலகிலிருந்து பெறக்கூடிய புலன்களையும் குறிக்கின்றது. இவ்விரு பகுதிகளுள் புறக்காட்சியில் இருந்தே அகக்காட்சி தோன்றுகின்றது. அதாவது கண்ணுக்கு முன் புற உலகில் இருக்கும் பொருட்களையே கண் பார்க்க முடியும். எனவே உலகால் ஆயதாக (தோன்றியதாக) அறிவு இருக்கின்றது. இவ் அறிவை எடுத்துரைப்பதால் உலகாயதம் அளவையியலோடு இணைகின்றது.

சிவஞான சித்தியார் பரபக்கத்திற்கு உரையெழுதிய திருவொற்றியூர் தத்துவப் பிரகாசர் உலகாயத மனக் காட்சியை ஐயக் காட்சி என்று விளக்குகின்றார் (1955:23). இது உலகில் இருக்கும் பொருள் தெளிவானது என்றும் மனம் ஐயப்படக் (சந்தேகப்படக்) கூடியது என்றும் சுட்டுகின்றது. இதனைப் புறநானூறு,

ஐயம் அறாஅர் கசடீண்டு காட்சி(புறம். 214:2)

என்று விளக்குகின்றது. சான்றாக, கயிறு கிடக்கின்றது. அதைப் பாம்பு என்று தவறாக மனம் உணர்வதற்கு வாய்ப்பு உள்ளது. கயிறு என்பதும் பாம்பு என்பதும் ஏற்கனவே புற

உலகில் கண்டு பெற்ற அறிவையே இந்த ஐயம் புலப்படுத்துகின்றது. இவ்விரண்டைப் பற்றியும் கருத்தைப் பெற்றிராத குழந்தைக்கு இரண்டும் விளையாட்டுப் பொருளாகவே இருக்கும். எனவே **புற உலகே அறிவைப் பெறுவதற்கான அடிப்படையாகின்றது. அதன்வழி உலகு ஆயது அறிவு என்பது தெளிவாகின்றது.**

எனவே உலகாயதம் என்ற சொல்லின் அளவைச் சிறப்பைத் தமிழ் தவிர்ந்த மொழிகளில் விளக்கமுடியவில்லை என்பதும் உலகாயதம் தமிழ்ச் சொல்லே என்பதும் தெளிவாகின்றது.

2. உலகால் ஆகிய பொருள் வாழ்வு

உலகு ஆயத அறிவு மரபு இவ்வுலக வாழ்வைப் பற்றியதாக நீள்கிறது. உலக வாழ்வைப் பழந்தமிழர் அகம், புறம் என்று இரு பகுதிகளாக விளக்கினர். பெண்ணைத் தலைமையாகக் கொண்ட அக மரபும் வேந்தரைத் தலைமையாகக் கொண்ட புற மரபும் இணைந்த தமிழரின் பொருள் மரபு உலகாயதரின் கோட்பாடாகியது. இதனைச் சிவஞான சித்தியார் பரபக்கம்,

கூடுவது உணர்வு கெட்டுக் குணமெலாம் வேட்கை யேயாய்

நீடுவது இன்ப முத்தி இத்தில்நின் றார்கள் முத்தர் (31:3-4)

என்றும்,

நாட்டினில் அரசன் ஆணைக்கு இசையவே நடந்து நாளும்

ஈட்டிய பொருள் கொண்டு இங்கே இன்பத்துள் இசைந்தி டீரே (32:3-4)

என்றும் விளக்குகின்றது.

பழந்தமிழ் இலக்கிய அகப்புறப் பொருளை வடமொழி நூல்கள் காமம், அர்த்தம் என்று குறிப்பிடுகின்றன. தீக நிகாயம் என்ற பாலிப் பௌத்தப் பிடக நூலில் உலகாயத நெறி அர்த்த (புற), காம (அக) மரபுகளை அடிப்படையாகக் கொண்டது என்று விளக்கப்பட்டுள்ளது (தே.ச. & மி.க. 2006:390). அதைப்போல சீன நாட்டில் பாதுகாக்கப்படும் சங்கதப் பௌத்த நூல்களில் வரும் லோகாயதம் என்ற சங்கதச் சொல் சான் சீ (Shun she), சான் சூ (Shun su) என்ற சீன சொற்களுக்கு இணையாகப் பயன்படுத்தப்படுகின்றது. இச்சொற்களுக்கு முறையே உலகத்தைப் பின்பற்றுபவர்கள், உலக வழக்கத்தைப் பின்பற்றுபவர்கள் என்று பொருள் வழங்கப்படுகின்றது (தே.ச. & மி.க. 2006:390). இவ்விளக்கங்கள் உலகியல் வழக்கைப் பின்பற்றிய பழந்தமிழர் பொருள் மரபின் தொடர்ச்சி உலகாயதம் என்பதைக் காட்டுகின்றது. **எனவே உலகால் ஆகிய (உலகாயத) அறிவு மரபையும் பொருள் வாழ்வையும் போற்றும் நெறியாக உலகாயதம் திகழ்கின்றது.**

மாதவரும் தேவிபிரசாத் சட்டோபாத்யாயாவும்

தமிழகத்தைச் சேர்ந்த சங்கரரைப் (பொ.ஆ. எட்டாம் நூற்றாண்டு) பின்பற்றி மாதவர் (பொ.ஆ. பதினான்காம் நூற்றாண்டு) பாமர மக்கள் (பிரகிருதிஜனம்) உலகாயதத்தைப் பின்பற்றுபவர் என்று விளக்குகின்றார் (தே.ச. 2014:4). இதன் மூலம்

சாதியப் படிநிலையில் கீழ்நிலையில் உள்ளவரின் கருத்தாக உலகாயதம் சுருக்கப்படுகின்றது.

மாதவரின் கருத்தை, "இந்தச் சொற்பொருள் தோற்றத்தினைக் காணும்போது உலகாயதத்தின் மீதான வெறுப்பே இத்தகைய கூற்றுகளுக்குக் காரணம் என்பது உண்மை" (2014:4) என்று மறுக்கும் தேவிபிரசாத் சட்டோபாத்யாயா, "ஆனால் இந்தக் கூற்றுகளின் முக்கியத்துவம் குறைந்துவிடவில்லை. இந்தச் சொல்லைப் பயன்படுத்துபவர்களுக்கு இத்தத்துவத்தின் மீதும் மக்கள் மீதும் எவ்வளவு வெறுப்பு இருந்தாலும் உலகாயதம் என்பதற்கு மக்களின் தத்துவம் என்பதே பொருள்" (2014:4) என்று விளக்கம் அளிக்கின்றார். அதன்வழி, "மக்களிடையே (லோக) பரவியிருந்தது (ஆயதா)" (2014:3) என்ற பொருளை லோகாயதம் என்ற சங்கதச் சொல்லுக்குத் தருகின்றார்.

தேவிபிரசாத் சட்டோபாத்யாயா தரும் விளக்கம் உலகாயதம் என்ற சொல்லின் உண்மையான பொருளைத் தேடுவதில் இருந்து விலகுவதைக் காட்டுகின்றது. அவர் உலகாயதத்தை மக்களின் காட்சியம் (தத்துவம்) என்று நிறுவ முயல்வதைக் காட்டுகின்றது. இழிவான மக்களின் (அல்லது தாழ்த்தப்பட்ட மக்களின்) இழிவான நெறி என்று உள்நோக்கத்தோடு விளக்கம் அளிக்கும் ஒருவர் அதன் உண்மையான பொருளை வெளிப்படுத்துவார் என்று எதிர்பார்ப்பது எப்படி சரியாக இருக்கும். எனவே தேவிபிரசாத் சட்டோபாத்யாயாவின் விளக்கம் பொருந்துவதாக அமையவில்லை.

குணாவும் க. நெடுஞ்செழியனும்

உலகாயதம் என்பதைத் தமிழ்ச்சொல் என்று நிறுவ முனைந்த குணா, "உலகாய்தம் என்னும் சொல்லே வடமொழியில் 'லோகாயதம்' என மருவியது. உலகாய்தம் 'உலகினை ஆய்கின்ற முறை' எனப் பொருள்படும்" (1980:68) என்று விளக்குகின்றார். அவர் இக்கருத்திற்கு வேறு எந்தச் சான்றையும் காட்டவில்லை. இக்கருத்தை ஏற்றுக் கொண்ட க. நெடுஞ்செழியன் அதற்கான சான்றுகளைத் தருகின்றார்.

ஓய்தல், ஆய்தல், நிழத்தல், சாஅய் ஆகிய நான்கு சொற்களும் ஒரு பொருளுக்கு உள்ள நுணுக்கத்தைக் காட்டக் கூடியது என்று தொல்காப்பியம் (813) விளக்குகின்றது. இங்கு, நுணுக்கம் என்பது நுட்பம் என்ற பொருளில் வருகின்றது. ஆய்தம் என்ற சொல்லுக்கான பொருளை, "அஃகேனம், சிறுமை, நுண்மை" என்று நா. கதிரைவேற்பிள்ளை அகராதி (நா. கதிரைவேற்பிள்ளை 1928:191) விளக்குகின்றது. இவ்விரண்டையும் இணைத்த க. நெடுஞ்செழியன், "உலகாய்தம் ஒரு கூட்டுச்சொல். இது உலகு + ஆய்தம் எனப் பிரியும். 'உலகைப் பற்றிய ஆராய்ச்சி' என்பது இச்சொல்லின் பொருளாகும். ஆய்தம் என்ற சொல் 'ஆய்' என்ற அடிச்சொல்லின் வழியாகப் பிறந்தது. ஆய் – ஆய்தல் – ஆராய்ச்சி – ஆய்தம் ஆகிய சொற்கள் நுண்மை, ஒரு பொருளின் நுண்மை குறித்த ஆய்வு என்னும் பொருளில் வழங்குவன" (1990:15) என்று விளக்குகின்றார்.

ஆய்தம் என்ற சொல்லுக்கும் ஆய்தல் என்ற சொல்லுக்கும் வேறுபாடுகள் உள்ளன. ஆனால் க. நெடுஞ்செழியன் ஆய்தல் என்ற சொல்லின் பொருளை ஆய்தம் என்ற சொல்லுக்கு ஏற்றுகிறார். ஆய்தம் என்ற சொல்லுக்குச் சிறுமை என்று பொருள். எனவே **உலகாய்தம் என்ற சொல்லுக்கு உலகம் சிறியது என்றே பொருள்.** நுண்மை என்ற சொல்லைக் கொண்டு உலகம் நுட்பமானது என்று வேண்டுமானால் பொருள் விரிவு செய்யலாம். ஆனால் உலகைப் பற்றிய ஆராய்ச்சி என்ற பொருளைக் கொண்டுவர முடியாது. எனவே குணா, க. நெடுஞ்செழியன் ஆகியோரின் கருத்துகள் பொருந்துவதாக அமையவில்லை.

தொகுப்புரை

உலகாயதம் என்ற சொல் உலகு, ஆயதம் ஆகிய இரு சொற்களால் ஆனது. உலகு ஆயத (உலகால் தோன்றிய) அறிவை விளக்குவதால் இந்நெறிக்கு உலகாயதம் என்று பெயர். ஆயதம் என்ற தமிழ்ச் சொல்லைத் தமிழக பௌத்தப் பள்ளியைச் சேர்ந்த புத்த கோசர் ஆயதனா என்ற சங்கதச் சொல்லோடு இணைத்துப் புலன்களாலும் (புறக்காட்சி - பார்க்கும் பொருள், ஒலி, மணம், சுவை, தொடும் பொருள்), பொறிகளாலும் (அகக்காட்சி - கண், காது, மூக்கு, நாக்கு, உடல், மனம்) உணரும் அறிவைக் குறிக்கிறார். இவ்விளக்கம் சங்கத, பாகத நூல்களில் இல்லை. எனவே இவ்விளக்கத்தைப் புத்த கோசர் தமிழக உலகாயத மரபில் இருந்து எடுத்திருக்க வேண்டும்.

தமிழில் காட்சி அளவையோடும் சங்கதத்தில் ஆன்விக்சீகி என்னும் அளவை அறிவியலோடும் பாலியில் விதந்தாவாத சத்தம் என்னும் சொற்போர் கலையோடும் தொடர்புபடுத்தி உலகாயதம் விளக்கப்படுகின்றது. ஆனால் உலகாயதம் என்னும் சொல்லின் பொருள் அளவையியலோடு பொருந்தி தமிழில்தான் விளக்கமாகக் கிடைக்கின்றது. லோகாயதா என்ற சங்கத, பாலிச் சொல்லுக்கு அப்பொருளை ஏற்ற முடியவில்லை. எனவே உலகாயதம் தமிழ்ச் சொல் என்பது தெளிவாகின்றது.

பெண்ணைத் தலைமையாகக் கொண்ட அக மரபும் (காமம்) வேந்தரைத் தலைமையாகக் கொண்ட புற மரபும் (அர்த்தம்) இணைந்த பழந்தமிழரின் பொருள் மரபு உலகாயதரின் கோட்பாடாகியது. இது வடமொழியில் அர்த்த, காம மரபாக விளக்கப்படுகிறது. ஆனால் அதற்கான மூலம் தமிழில்தான் கிடைக்கின்றது.

உலகாயதத்தை ஆய்ந்து அதன் சொற்பொருளை விளக்க முனைந்த, தேவிபிரசாத் சட்டோபாத்யாயா, குணா, க. நெடுஞ்செழியன் முதலான அறிஞரும் சரியான விளக்கங்களை அளிக்கவில்லை.

உலகாயதம் ஐந்து பூதங்களை அடிப்படையாகக் கொண்ட நெறி. இதனைச் சூத்திர கிரதங்க சூத்திர விருத்தியில் சீலங்கர் உறுதி செய்கின்றார். ஆனால் பிற்காலத்தில் உலகாயதம் நான்கு பூதங்களை அடிப்படையாகக் கொண்ட நெறியாக மாறியது. அதற்கு வட இந்தியாவில் புகழ் பெற்றிருந்த சாருவாகம் காரணமாக இருந்திருக்க வேண்டும்.

சான்றெண் விளக்கம்

1. வைசேடிகம் என்பதற்குப் பதிலாக யோகம் என்ற சொல் அர்த்த சாத்திரத்தில் வருகின்றது. இதனை மறுக்கும் ராமகிருஷ்ண பட்டாச்சார்யா வைசேடிகம் என்பதே சரி என்று விளக்குகின்றார் (2011:132-133).
2. பிலாசபி (Philosophy) என்ற ஆங்கிலச் சொல்லிற்கு இணையாகக் காட்சியம் என்ற சொல் இங்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது.
3. உலோகாயதன் என்ற பாடத்தை உ.வே. சாமிநாதையர் கொடுக்கின்றார். அவருக்கு முன் மணிமேகலையைப் பதிப்பித்த திருமயிலை சண்முகம் பிள்ளையைப் பின்பற்றி உலகாயதன் என்ற பாடம் கொடுக்கப்பட்டுள்ளது.

நன்றியுடைமை

ஆகச்சிறந்த கருத்துகளை வழங்கி, இக்கட்டுரையைச் செம்மை செய்ய உதவிய பேராசிரியர் க. காசிமாரியப்பன், பேராசிரியர் சா. சாம்கிதியோன், பேராசிரியர் ரா. ராஜராஜன் ஆகியோருக்கு என் நெஞ்சார்ந்த நன்றிகள்.

துணைநூற் பட்டியல்

1. சாமிநாதையர், உ.வே. (உ.ஆ.), 2013. **மணிமேகலை,** சென்னை: டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம்.
2. வேங்கடசாமிநாட்டார், ந.மு. & துரைசாமிப்பிள்ளை, ஔவை சு. (உ.ஆ.). 2015. **கூலவாணிகன் சாத்தனாரின் மணிமேகலை மூலமும் உரையும்,**சென்னை: சாரதா பதிப்பகம்.
3. கந்தப்பிள்ளை. ஆ.இ. **தத்துவப்பிரகாச சுவாமிகள் அருளிச் செய்த தத்துவப் பிரகாசம் மூலமும் உரையும்,**சோதிடப் பிரகாசயந்திரசாலை: கொக்கவில்.
4. குணா. 1980. தமிழர் மெய்யியல், சென்னை: பொதுமை வெளியீடு.
5. தத்துவப்பிரகாசர், திருவொற்றியூர். 1955. **சிறீ அருணந்தி தேவ நாயனார் அருளிச் செய்த சிவஞானபோத பரபக்கம் மூலமும் உரையும்,**திருச்சிராப்பள்ளி: திருவாவடுதுறை ஆதீனம்.
6. தேவிபிரசாத் சட்டோபாத்யாயா. 2014. **உலகாயதம் - பண்டைக்கால இந்தியப் பொருள்முதல்வாதம் பற்றிய ஆய்வு,** எஸ். தோதாத்ரி (மொ.ஆ.), சென்னை: என்.சி.பி.எச்.
7. நிர்மல் செல்வமணி. 1996. **தமிழ்க் காட்சி நெறியியல்,**சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
8. நெடுஞ்செழியன், க. 1990. **தமிழ் இலக்கியத்தில் உலகாயதம்,**திருச்சிராப்பள்ளி: மனிதம் பதிப்பகம்.
9. கதிரைவேற்பிள்ளை, நா. 1928. **நா. கதிரைவேற்பிள்ளை அகராதி,**பி.வி. நமச்சிவாய முதலியார் (ப.ஆ.), சென்னை, https://dsal.uchicago.edu/dictionaries/kadirvelu/
10. -------- **தமிழ் லெக்சிகன்,** (சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதி), சென்னை: சென்னைப் பல்கலைக்கழகம், https://dsal.uchicago.edu/dictionaries/tamil_lex/

11. -------- **The Pali Text Society's Pali - English Dictionary, The Pali Text Society, London: Luzac,** https://dsal.uchicago.edu/dictionaries/pali
12. Arthur Anthony Macdonell. 1929. **A practical Sanskrit dictionary with transliteration, accentuation and etymological analysis throughout,**London: Oxford University Press (https://.dsal.uchicago.edu/dictionaries/macdonell/).
13. Dasgupta, S.N. 1952. **A history of Indian Philosophy, Vol. 3,**London: Cambridge at the university Press.
14. Deviprasad Chattopadhyaya & Mrinal kanti Gangopadhyaya. 2006. **Carvaka / Lokayata – An anthology of source materials and some recent studies,**NewDelhi: Indian council of Philosophical research.
15. Gabriel Ellis. 2021. **Ayatana, the Buddha's forgotten teaching,**Academia Letters, Article 749.
16. Radhakrishnan, S. 1923. **Indian Philosophy, Vol. 1,**London: George Allen & unwin ltd.
17. Ramakrishna Bhattacharya. 2011. **Studies on the Carvaka / Lokayata,**Newyork: Anthem Press.
18. Ramakrishna Bhattacharya. 2020. **More Studies on the Carvaka / Lokayata,**United Kingdom: Cambridge Scholars Publishing.
19. Sundaram, C.S. 1999. **Contribution of Tamil nadu to Sanskrit,**Chennai: Institute of Asian Studies.
20. Sivakumara Swamy, M. 1977. **Haribadrasuri's Saddharsana Samuccaya,**Bangalore: Prasaranga Bangalore University.
21. Vidyabhusana, Satis Chandra. 1921, **History of Indian logic (Ancient, Mediaeval and Modern schools),** Calcutta: University of Calcutta.